# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# அறிவிப்பு

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தேதியில் அல்லது அதற்கு முன் (18 ஜூன் 2021) 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாத மாணவர்களுக்கான அறிவிப்பு.**

2020 அக்டோபர் இல் நடைபெற்ற (கா.பொ.த) உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2020/2021 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தலானது 2021 ஜூன் 18 அன்று முடிவுறுத்தப்பட்டது.. இருப்பினும், அந்த நேரத்தில் நாட்டில் கோவிட் -19 பெருந்தொற்றினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடு / ஊரடங்கு உத்தரவு காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழி மூலம் விண்ணப்பிக்க முடியாது போன மாணவர்கள் இருந்தால், அத்தகைய மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான சலுகை காலத்தை **2021 ஜூலை 26 முதல் 30** வரை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

இந்த சலுகைக் காலத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் **2021 ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 14 வரையான இரண்டு (02) வாரங்களுக்குள்** ஒரு முறை மாத்திரம் அவர்களின் யுஜிசி கணக்கில் உள்நுழைந்து ஆன்லைனில் "யூனி-கோட்களின்" வரிசையை மாற்ற முடியும் என்பதையும் நினைவில் கொள்க.

**முக்கியம்:**
இந்த சலுகைக் காலத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சாத்திகள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் பெறப்பட்ட அச்சிடப்பட்ட விண்ணப்பத்தில் தங்கள் கையொப்பத்தை சரியாக இட வேண்டும் மற்றும் விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை அல்லது முழுமையான விண்ணப்பத்தின் கையொப்பமிடப்பட்ட தெளிவான படத்தை (புகைப்படம்) apply2020@ugc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியது கட்டாயமாகும். முழுமையான விண்ணப்பத்தை 2021 **ஜூலை 31 அல்லது அதற்கு முன்னர்** பதிவுத்தபால் வழியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்புமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
24.07.2021